முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான்

எதிர்காலம் குறித்த இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 12 திகதி முதல்
சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 19 திகதி வரை
(29.10.2023 ஞாயிறு முதல் 05.11.2023 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. தருமனாக ஞானத்தலைவனும்
   தவராசனாக அவதாரம் புரிந்து
   பெருமைபட சேவை ஆற்றிவர
   புண்ணியவான் அரங்க மகானை போற்றி
2. போற்றியே அகத்திய மகரிஷி யானும்
   புகலுவேன் சோபகிருது துலைதிங்கள்
   உற்ற வியதிகதிமேல் மூவாறோர் திகதிவரை
   உரைத்திடுவேன் இந்தியா தமிழகம் தன்னில்
3. தன்னில் நடக்கும் வார நிகழ்வாக
   தக்கவருங்கால ஆசிதனை உரைப்பேன்
   அன்னதான மகா சேவை
   ஆற்றுகின்ற அரங்கன் மார்க்கம்
4. மார்க்கம் மக்களை தேற்றும்
   மகத்துவமுள்ள வழிகளாக இருக்க
   பார்த்துரைக்க அதிகார வர்க்கம்
   பதவிகாணும் ஆளுமை சக்திகளும்
5. சக்திகளும் நாடிவந்து அணுகி
   சரணாகதி கொண்டு வர
   சக்திமிகு மாற்றங்கள் கூடி
   சத்திய ஞான ஆட்சி தருகின்ற

6. தருகின்ற ஆளுமைகளாக
   தமிழகம் இந்தியா மாற்றம் பெறும்
   தருகின்ற தயவு குணம் நிறைந்த
   தருமவான்கள் எனும் அடையாளம்
7. அடையாளம் கூடி பதுக்கிய
   அனைத்துமே அறமாக மாறி
   தடையற எங்கும் தருமசேவையாக
   தமிழகம் இந்தியா முழுக்க
8. முழுக்க நல்லாட்சி ஞானஆட்சி
   முழுமை பெற்ற ஞானவான்கள்
   முழுக்க நிறைந்த ஞானசபையாக
   முன்னேற்றம் தருகின்ற வண்ணம்
9. வண்ணம் தேசம் எங்கிலும்
   வளர்ச்சிப் பணிகளாக மாறி
   எண்ணம் எக்காலமும் தீயவழி
   எடுத்துச் செல்லா தலைமைகளாக
10. ஆகவே மாற்றம் கண்டு
   அற்புதம் ஞானிகள் வெளிப்பட
   செகமே வியக்க நடந்தேறும்
   சிறுமைகள் எல்லாம் விலகி ஓடும்
   வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 12ம் நாள் 29.10.2023 ஞாயிற்றுக்கிழமை முதல் ஐப்பசி மாதம் 19ம் நாள் 05.11.2023 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள கால நிகழ்வுகள் :

தருமத்தின் தலைவனாகியவரும் ஞானத்தலைவனுமாகிய முருகப்பெருமானே தவராசனாக அரங்க மகா தேசிகராக இவ்வுலகினில் கலியுகத்திலே இந்த காலத்திலே அவதாரம் புரிந்து உலக மக்களுக்கு

தன்னலமற்று சேவைகள் செய்து வருகின்ற படியினாலே எல்லையில்லா புண்ணியம் மிக்க அரங்க மகானை போற்றியே அகத்திய மகரிஷி யானும் சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் **12**ம் நாள் **29.10.2023** ஞாயிற்றுக்கிழமை முதல் ஐப்பசி மாதம் **19**ம் நாள் **05.11.2023** ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள கால நிகழ்வுகளை வார ஆசி நூலாக உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

தானத்திலே சிறந்ததும் ஞானம் அளித்து மக்களை பாவவினைகளில் இருந்து மீட்கும் வல்லமை மிக்க அன்னதான மகா சேவைதனை ஆற்றி உலகோரை காக்கின்ற ஆறுமுக அரங்க மகான் கூறும் உண்மை ஞானநெறியாகிய தயவு மார்க்கமே மக்களை கடைத்தேற்றும் மார்க்கமாகும். அதுவே மக்களை காப்பாற்றும் மார்க்கமாக இருக்கின்றதாலே ஆட்சி புரிபவர்களும் அதிகார வர்க்கங்களும் பதவிகளை வகிப்போரும் அரங்க மகானை நாடி வந்து அரங்கரிடத்து ஆசி பெற்று அரங்க மகான் கூறும் தர்மநெறிகளை ஏற்று சரணாகதியாகி கடைப்பிடித்து வந்திட்டால் பின்பற்றுகின்ற அவர்களுக்கு சக்திகள் பெருகி வாழ்விலே நல்ல மாற்றங்கள் உண்டாகுமப்பா.

அவர்களெல்லாம் உலகினில் சத்திய ஞான ஆட்சியை தருகின்ற ஆளுமைகளாக மாறி இந்தியா தமிழகம் நல்ல மாற்றத்தை காணுமப்பா. பிறருக்கு தாராளமாய் பொருளை அளித்து காக்கும் தயவு மிக்க தருமவான்கள் என்கிற பெரும் அடையாளத்தை பெறுவார்கள். பொருளாசை கொண்டு இது வரை தவறான வழிகளிலே சேர்த்திட்ட பொருளையும் அவர்கள் அறமாக மாற்றி நாடெங்கும் தரும சேவைகளை ஏராளமாய் செய்து நாடெங்கும் நல்லாட்சியாக ஞான ஆட்சியாக மாற்றம் பெறும் விதமாக ஞானம் பெற்றவர்கள் நிறைந்த ஞான சபையாக மாறிடும்.

எல்லா விதமான முன்னேற்றங்களையும் தருகின்ற வகையிலே நாடெங்கும் வளர்ச்சி பணிகள் பெருகிடும் எக்காலத்தும் தவறான வழிகளிலே செல்லா தலைமைகளாக மாற்றம் அடைந்து ஞானிகள் வெளிப்படும் ஞான ஆட்சியாக இந்த பூமியே வியக்குமாறு அற்புதமாய் நடந்தேறுமப்பா நாட்டை பற்றிய சிறுமையான செயல்கள் எல்லாம் நாட்டை விட்டே விலகி ஓடிடுமப்பா எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–